# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

**<u>சாதாரண கூட்டப் பொருள்</u>**

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **30.03.2023** | **1.** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட ஜின்பேக்டரி நடுநிலைப்பள்ளி, தெற்கு புதுத்தெரு நடுநிலைப்பள்ளி, கிழக்கு மண்டல அலுவலகம் மற்றும் குரூஸ்புரம் பகுதியில் உள்ள சாமுவேல்புரம் உயர்நிலைப்பள்ளி, ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த பயன்படுத்த முடியாத டேபிள், சேர் மற்றும் இரும்பு, மரப்பொருள்களை அப்புறப்படுத்தும் பணிக்கு, 12.01.2022 அன்று மின்னணு மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br>மேற்கண்ட ஏலத்தில் கலந்து கொண்ட நபர்களில் திரு.நாகூர் முகைதீன், திருநெல்வேலி, ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.2,19,286.30/–, (GST 18% ரூ.39,472/– வருமான வரி 2% ரூ.4,386/–) சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,63,145/– கூடுதல் வைப்புத்தொகை (20%) ரூ.52629/– கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.2,63,145/–ம், மற்றும் கூடுதல் வைப்பு தொகை ரூ.52629/– செலுத்தியுள்ளார். மேற்படி ஒப்பந்தபுள்ளி முடிவு செய்திடவும், மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :<br>**1)** பழுதடைந்த பயன்படுத்த முடியாத டேபிள், சேர் மற்றும் இரும்பு, மரப்பொருள்களை அப்புறப்படுத்தும், பணிக்கு ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.2,63,145/–ம், கூடுதல் வைப்பு தொகை ரூ.52629/–ஐ மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். | 292)அலுவலகக் குறிப்பு<br>1.மாமன்றத்தால் அங்கீகரிக்கப் பட்டது<br>2.மாமன்றத்தால் அங்கீகரிக்கப் பட்டது. |

இ5/6441 /2022

**2)** இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், மற்றும் மாநகரப் பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் ஆகியவற்றின் குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் (City Livelihood Centre) மூலம் District Collector approved rate 2022–23ம் ஆண்டின்படி தினக்கூலி பணியாளர்கள் 64 நபர்கள் கீழ்கண்ட பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

| வ.எண் | பணியாளர்களின் பணி விவரம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Electrician | 1 |
| 2 | Electrician Helper | 6 |
| 3 | Cleaner/Lab Attendant | 3 |
| 4 | Cleaner/Water Carrier | 3 |
| 5 | Fitter | 1 |
| 6 | Cleaner/Watch Man | 2 |
| 7 | Cleaner | 48 |

மேற்கண்ட விவரப்படி பணியமர்த்தப்பட்ட தினக்கூலி பணியாளர்களுக்கு தற்போதைய பணிக்காலமானது 31.03.2023ல் முடிவடைகிறது. எனவே, மாநகராட்சி பகுதிகள் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, வல்லநாடு மற்றும் கலியாவூர் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோக பணிக்கு போதைய பணியாளர்கள் இல்லாததால் நகர்புற வாழ்வாதார மையம் (CLC) தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட மேற்படி கண்டுள்ள பதவிக்கான பணிக்காலத்தினை 01.04.2023 முதல் 31.03.2024 வரை ஓராண்டு காலத்திற்கு நீடித்து கொள்ளவும், தற்போது குடிநீர் விநியோக பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள கூடுதலாக ஒரு நபரையும் சேர்த்து பணியாற்றி வரும் மொத்தம் 65 தினக்கூலி பணியாளர்களுக்கான கூடுதல் உத்தேச செலவினம் ரூ.110.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மாமன்றம் அனுமதிக்கலாம்

இ3/3874/2018

293)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.

3) இம்மாநகராட்சிக்கு உட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பணியமர்த்தப்பட்டு 8 நகர சுகாதார செவிலியர்கள், 15 கணிணி இயக்குநர், 1பிளாண்டோரியம் கணிணி இயக்குநர் மற்றும் 1போட்டோகிராபர் ஆகியோர் தற்காலிகமாக பணிபுரிந்து வருகின்றனர்.

நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் ஊதியம் வழங்கப்படும் 8நகர சுகாதார செவிலியர்கள், 15கணிணி இயக்குநர்கள், 1 பிளாண்டோரியம் கணிணி இயக்குநர் மற்றும் 1போட்டோகிராபர் ஆகியோருக்கு 25.03.2023ல் மாமன்ற அனுமதி முடிவடைகிறது. தற்போது தேவைப்படும் பணியாளர்கள் விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண் | பதவி | எண்ணிக்கை | ஊதியம் ரூ. | மாதம் / நாள் | தொகை 2023–2024 நிதி ஆண்டிற்கு |
|---|---|---|---|---|---|
| 1 | சுகாதார செவிலியர் | 8 | 11000 | 12 | 10,56,000.00 |
| 2 | கணிணி இயக்குநர்கள் | 16 | 573 | 365 | 33,46,320.00 |
| 3 | பிளன்டோரியம் கணிணி இயக்குநர் | 1 | 573 | 365 | 2,09,145.00 |
| 4 | போட்டோகிராபர் | 1 | 633 | 365 | 2,31,045.00 |
| | | | | | 48,42,510.00 |
| இபிஎப், இஎஸ்ஐ மற்றும் சேவை கட்டணம் 18.41ரூ | | | | | 8,91,506.09 |
| மொத்தம் | | | | | 57,34,016.09 |

மேற்படி பட்டியலில் உள்ள நபர்களை 26.03.2023 முதல் 25.03.2024 வரையிலான காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும், அவர்களுக்கான ஊதியம் தொகை ரூ.57.50இலட்சம் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் 8 நகர சுகாதார செவிலியர்கள், 16 கணிணி இயக்குநர்கள், 1 பிளாண்டோரியம் கணிணி இயக்குநர் மற்றும் 1 போட்டோகிராபர் ஆகியோரை 26.03.2023 முதல் 25.03.2024 வரை தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.57.50இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

எச்1/1242/2023

294) அனுமதி வழங்கப்பட்டது.

4) இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்து 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பபட்ட போது அருகில் உள்ள தூாதத்துக்குடி ரூரல், சங்கரப்பேரி, மீளவிட்டான், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய 5 பஞ்சாயத்துகள் சேர்க்கப்பட்டது. அப்போது இம்மாநகராட்சியில் 51 வார்டுகள் மற்றும் பஞ்சாயத்து பகுதிகள் சேர்த்து 60 வார்டுகள் உள்ளடங்கியதாகும். மாநகராட்சிக்கான அடிப்படை பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் அரசிடமிருந்து அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள போதிய நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 24100/பி3/2017 நாள் 31.10.2017ன் படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் ஏற்படும் காலி இடங்களை தனியார் மூலமாக மாமன்ற அனுமதியுடன் Tender Act Rules 2000ன்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி ஏதும் பெற தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான ஒப்பந்தபுள்ளியானது 24.03.2023ல் கோரப்பட்ட நிலையில், மேற்படி பணிக்கான அனுமதி காலம் 25.03.2023ல் நிறைவடைகிறது. தற்போது மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் மற்றும் இதர பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் கிழ்க்கண்டவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

| வ. எண் | பணியிட விபரம் | பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் ரூ. | மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர்கள் | 630 | 433 | 84,56,490/– |
| 2 | கம்போஸ்ட் சூப்பர்வைசர் | 1 | 490 | 15,190/– |
| 3 | டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர் | 150 | 417 | 19,39,050/– |
| 4 | மேற்பார்வையாளர்கள் | 70 | 490 | 10,63,300/– |
| 5 | TATA ACE வாகன ஓட்டுனர்கள் | 169 | 521 | 27,29,519/– |
| 6 | JCB வாகன ஓட்டுனர் | 2 | 554 | 34,348/– |
| 7 | தூய்மைக் காவலர்கள் | 19 | 573 | 3,37,497/– |
| 8 | கணினி இயக்குபவர் | 17 | 573 | 3,01,971/– |
| 9 | நகர சுகாதார செவிலியர் | 8 | 11000 (மாதம்) | 88,000/– |

295) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>10</td><td>பள்ளி கழிவறை பராமரிப்பு தூய்மைப் பணியாளர்கள்</td><td>40</td><td>433</td><td>5,36,920/–</td></tr>
<tr><td>11</td><td>போட்டோகிராபர்</td><td>1</td><td>633</td><td>19,623/–</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>1107</td><td></td><td>1,55,21,908/–</td></tr>
</table>
எனவே தனியார் ஒப்பந்த பணியாளர்கள் பணியமர்த்த வேலை உத்திரவு வழங்கி பணியாளர்கள் பணியமர்த்தும் காலம் வரை மேற்படி பணியிடங்களின் அவசர அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி தொடர்ந்து பொது சுகாதார பணிகள் எவ்வித தடையின்றி நடைபெற ஏதுவாக மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களை 26.03.2023 முதல் பணியமர்த்திக்கொள்ள அனுமதிக்கவும், மேலும் அதற்குரிய உத்தேச செலவினம் மாதம் 1க்கு ரூ.1.60 கோடிக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு :</u> 26.03.2023 முதல் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் பணியமர்த்த வேலை உத்திரவு வழங்கி பணியாளர்கள் பணியமர்த்தும் காலம் வரை நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.1.60 கோடிக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
எச்1/296/2018
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>5) தூத்துக்குடி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நாள் ஒன்றிற்கு 150 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 7 துப்புரவு மேற்பார்வையாளர்கள் M/s. Ourland Engineering Works Pvt Ltd நிறுவனத்தினர் மூலம் ஆள்வெளிக்கொணர்வு முறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களுக்கு 2018–2019 நிதியாண்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக தினக்கூலி விகித பட்டியலின் படி (Schedule of Rate) துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றிக்கு ரூ.354/–(ESI,EPF,Ins.,ServiceCharges தவிர்த்து) மற்றும் துப்புரவு மேற்பார்வையாளருக்கு ரூ.426/–(ESI, EPF, INS., Service charges தவிர்த்து) என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணி தொடர்பான ஒப்பந்தபுள்ளியானது 24.03.2023ல் கோரப்பட்ட நிலையில் மேற்படி பணிக்காலம் அனுமதி 31.03.2023 அன்றுடன் முடிவடைகிறது. எனவே 01.04.2023 முதல் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் பணியமர்த்த வேலை உத்தரவு வழங்கி பணியாளர்கள் பணியமர்த்தும் காலம் வரை தினக்கூலியானது 2018–2019 நிதியாண்டில் வழங்கப்பட்ட</td>
<td>296)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | விலை விகிதத்திலேயே பணிகளை தொடர்ந்து M/s. Ourland Engineering Works Pvt Ltd வழங்கிடவும், இதற்கான உத்தேச செலவின தொகை மாதம் 1க்கு ரூ.22,00,000/– வீதம் செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்3/2275/17 | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நாளொன்றிற்கு 150 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 8 துப்புரவு மேற்பார்வையாளர்கள் M/s.S.K.Selvi நிறுவனத்தினர் மூலம் ஆள்வெளிக்கொணர்வு முறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களுக்கு 2020–2021 நிதியாண்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக தினக்கூலி விகித பட்டியலின் படி (Schedule of Rate) துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றிக்கு ரூ.392/–(ESI, EPF, Ins., Service Charges தவிர்த்து) மற்றும் துப்புரவு மேற்பார்வையாளருக்கு ரூ.472/–(ESI, EPF, INS., Service charges தவிர்த்து) என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்டிபடி பணி தொடர்பான ஒப்பந்தபுள்ளியானது 24.03.2023ல் கோரப்பட்ட நிலையில் மேற்படி பணிக்காலம் அனுமதி 31.03.2023 அன்றுடன் முடிவடைகிறது. எனவே 01.04.2023 முதல் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் பணியமர்த்த வேலை உத்தரவு வழங்கி பணியாளர்கள் பணியமர்த்தும் காலம் வரை தினக்கூலியானது 2020–2021 நிதியாண்டில் வழங்கப்பட்ட விலை விகிதத்திலேயே பணிகளை தொடர்ந்து வழங்கிடவும், இதற்கான உத்தேச செலவின தொகை மாதம் 1க்கு ரூ.25,00,000/– வீதம் செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்3/2275/17 | 297) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, மலேரியா போன்ற தொற்று நோய்களை பரப்பும் கொசுக்களை கட்டுப்படுத்த 300 (150பேர் வீதம் 15நாட்கள் சுழற்சி முறையில்) டெங்கு களபணியாளர்கள் (DBC) மாமன்ற அனுமதி பெற்று ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேற்படி வகைக்கு பெறப்பட்ட மாமன்ற அனுமதி 25.03.2023னுடன் நிறைவடைய உள்ள நிலையில், மேற்படி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாக உள்ளது எனவே, மேற்படி டெங்கு பணியாளர்கள் 300(150பேர் வீதம் 15நாட்கள் சுழற்சி | 298) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

முறையில்), வாகனங்கள் மூலம் புகை மருந்து அடித்தல், கொசுப்புழு அழிக்கும் மருந்து தெளிக்கும் பணிக்கு 6பணியாளர்கள் மற்றும் 15மேற்பார்வையாளர்கள், தொடர்ந்து நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலம் ஈடுபடுத்திக் கொள்ளவும். மேற்படி பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3.13கோடியை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பதவி | எண்ணிக்கை | ஊதியம் ரூ. | மாதம் / நாள் | 26.03.2023 முதல் 25.03.2024 வரை |
|---|---|---|---|---|---|
| 1 | டெங்கு களப்பணியாளர்கள் 306(156பேர் வீதம் 15நாட்கள் சுழற்சி முறையில்) | 156 | 417 | 365 | 2,37,43,980.00 |
| 2 | மேற்பார்வையாளர்கள் | 15 | 490 | 365 | 26,82,750.00 |
| | | | | | 2,64,26,730.00 |
| இபிஎப், இஎஸ்ஐ மற்றும் சேவை கட்டணம் 18.41% | | | | | 48,65,161.00 |
| மொத்தம் | | | | | 3,12,91,891.00 |

அலுவலக குறிப்பு : டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு 26.03.2023 முதல் 25.03.2024 வரை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3.13கோடிக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

எச்1/1241/2023

8) இம்மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி பள்ளி கழிவறைகள் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் இல்லாததால் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் அனுமதிக் காலம் 25.03.2023ல் மாமன்ற அனுமதி முடிவடைகிறது.

| வ. எண் | பதவி | தூய்மை பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் | நாட்கள் | 26.03.2023 முதல் 25.03.2024 வரை |
|---|---|---|---|---|---|

299)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>தூய்மை பணியாளர் (மாநகராட்சி பள்ளி பராமரிப்பு)</td><td>40</td><td>433</td><td>365</td><td>63,21,800.00</td></tr>
<tr><td colspan="5">இபிஎப், இஎஸ்ஐ மற்றும் சேவைக்கட்டணம் 18.41%</td><td>11,63,843.00</td></tr>
<tr><td colspan="5">மொத்தம்</td><td>74,85,643.00</td></tr>
</table>
மேற்படி பட்டியலில் உள்ள தூய்மை பணியாளர்களை 26.03.2023 முதல் 25.03.2024 வரையிலான காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.75.00இலட்சம் நகர்புற வாழ்வாதார மையம் மூலம் கல்வி நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பள்ளி கழிப்பறைகளை சுத்தம் செய்யும் தூய்மை பணியாளர்களை 26.03.2023 முதல் 25.03.2024 வரையிலான காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.75.00இலட்சம் மாமன்ற அனுமதிக்கலாம்.<br>
<br>
எச்1/1243/2023
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>9) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், தினசரி சேகரமாகும் திடக்கழிவுகள் மட்கும் கழிவுகளை தவிர்த்து மற்ற கழிவுகள் மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக் கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி குப்பைகளை ஒரே இடத்தில் சீரான முறையில் குவிக்கும் பணிகளையும், மாநகராட்சியில் சாலை ஓரத்தில் வளர்ந்துள்ள கருவேல மரங்களை அகற்றும் பணி மேற்கொள்ளவும், பொது சுகாதார பிரிவு சம்பந்தமான பணிகள் மேற் கொள்ளவும், தனியார் ஒப்பந்தகாரர் சுதா Engineering J.C.B Truck operators, தூத்துக்குடி என்ற நிறுவனம் மூலம், பிப்ரவரி 2023 முதல் மார்ச் 2023 வரை ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்படி பணிக்கான நீட்டிப்பு காலம் முடிவடைவதால் 01.04.2023 முதல் 30.09.2023 வரை 6 மாதங்களுக்கு சுதா Engineering J.C.B Truck operators, தூத்துக்குடி நிறுவனத்தின் மூலமாக தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினத் தொகை மாதம் ஒன்றிக்கு ரூ.2,00,000/– வீதம் 6 மாதத்திற்கு ரூ.12,00,000/– பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும்</td>
<td>300)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்3/3764/2018</td><td></td></tr>
<tr><td></td><td>10) தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் திறந்தவெளி மலம் கழித்தலை தவிர்க்கும் பொருட்டும், தொற்று நோய்கள் பராவாமல் தடுக்கவும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள சமுதாயம் மற்றும் பொது கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே, மேற்படி வகைக்கு தேவைப்படும் கீழ்க்கண்ட விபரப்படியான பணியாளர்கள் மற்றும் தொடர்ந்து புதிய கழிப்பறைகள் கட்டப்படுவதால் தேவைப்படும் பணியாளர்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலி விகிதத்தில் நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலம் 26.03.2023 முதல் 25.03.2024 வரை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1.09கோடிக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பதவி</th><th>எண்ணிக்கை</th><th>நாளொன்றிற்கு ஊதியம் ரூ.</th><th>மாதம் / நாள்</th><th>26.03.2023 முதல் 25.03.2024 வரை</th></tr>
<tr><td>1</td><td>தூய்மை பணியாளர்கள் (கழிப்பறை பராமரித்தல்)</td><td>58</td><td>433</td><td>365</td><td>91,66,610.00</td></tr>
<tr><td colspan="5"></td><td>91,66,610.00</td></tr>
<tr><td colspan="5">இபிஎப், இஎஸ்ஐ மற்றும் சேவை கட்டணம் 18.41%</td><td>16,87,573.00</td></tr>
<tr><td colspan="5">மொத்தம்</td><td>1,08,54,183.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> :<br>மேற்படி தூய்மை பணியாளர்களுக்கு 26.03.2023 முதல் 25.03.2024 வரையிலான காலத்திற்கு நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1.09கோடிக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்1/1245/2023</td><td>301)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td></td><td>11) தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெறும் சீர்மிகு நகர</td><td>302)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி பணிகளை பார்வையிடவும், பணியினை அளவீடு செய்து, செலவின பட்டியல் தயார் செய்ய இளநிலை பொறியாளர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் உதவிட ஏதுவாக, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2022– 2023ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City livelihood centre) மூலம் 11 தொழில்நுட்ப உதவியாளர்கள் தற்காலிக ஊதிய அடிப்படையில், நடப்பு ஆண்டு மாமன்ற தீர்மான எண் 74, நாள்.27.09.2022ன் படி, 01.04.2022 முதல் 31.03.2023 வரை தொழில்நுட்ப உதவியாளர்கள் 11 நபர்கள் ஈடுப்படுத்திக்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிக்காலம் 31.03.2023வுடன் முடிவடைகிறது.<br><br>மேற்கண்ட 11 தொழில்நுட்ப உதவியாளர்கள் பணிக்காலத்தினை 01.04.2023 முதல் 31.03.2024 வரை நீட்டித்து கொள்ளவும், மாமன்ற தீர்மான எண்.254, நாள்.29.12.2022ன் படி, 2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பட்டயப்படிப்பு (Diploma in Civil Engineering) – ரூ.573/–, பட்டப்படிப்பு (Bachelor of Engineering) – ரூ.755/–, வீதம் உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.26.00 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் 11 நபர்களின் பணிக்காலத்தினை 01.04.2023 முதல் 31.03.2024 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.26.00 இலட்சத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>E5/0186/17-18 | பட்டது. |
| | 12) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான சத்திரம் தெரு கழிவு நீரேற்று நிலையம், குரூஸ்புரம் நிலையம், பாளை ரோடு மார்க்கெட் சந்திப்பு கழிவு நீரேற்று நிலையம் ஆகியவைகளில் தினமும் மோட்டார்களை இயக்கி சேகரமாகும் கழிவு நீரை வெளியேற்றம் செய்யும் பணிகள் மற்றும் மைய அலுவலக வளாகத்தில் மின்தடை ஏற்பட்டு அலுவலக பணிகள் பாதிக்கப்படும் சூழலில் இதன் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள 250KVA | 303)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஜெனேட்டரை இயக்கவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் போதிய பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாத நிலையில், தினக்கூலி அடிப்படையில் பம்ப் ஆப்ரேட்டர் மற்றும் கிளினரை நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தற்காலிக அடிப்படையில், நடப்பு ஆண்டு மாமன்ற தீர்மான எண்73, நாள்.08.04.2022ன் படி 01.04.2022 முதல் 31.03.2023 வரை பம்ப் ஆப்ரேட்டர் 3 நபர்கள் மற்றும் கிளினர் 1 நபர் ஈடுப்படுத்திக்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2023வுடன் முடிவடைகிறது.<br>மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.04.2023 முதல் 31.03.2024 வரை நீட்டித்து கொள்ளவும், 2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பம்ப் ஆப்ரேட்டர் – ரூ.554, மற்றும் சீவர் கிளினர் – ரூ.433/– வீதம், உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.8.00 இலட்சம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:<br>இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தப்பட்ட பம்ப் ஆப்ரேட்டர் 3 நபர்கள் மற்றும் கிளினர் –1 நபருக்கு 01.04.2023 முதல் 31.03.2024 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ5/2396/2019 | |
| | 13) இம்மாநகராட்சி மைய மற்றும் மண்டல அலுவலகங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் முற்றிலும் கணினி மயமாகிவிட்டதால், குடிநீர் கேட்பு எழுப்புதல் மேற்கொள்ளவும், மற்றும் சொத்து வரி பொது சீராய்வு பணியினை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும் போதிய பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாததால், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2022– 2023ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City livelihood centre) மூலம் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) கணினி பிரிவு மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு தற்காலிக ஊதியம் அடிப்படையில் 8 கணினி இயக்குபவர்கள், மாமன்ற தீர்மான எண் 72, நாள்.08.04.2022ன் படி அனுமதிக்கப்பட்டு | 304)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | பணியில் ஈடுப்படுத்தப்பட்டு வருகிறார்கள். மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2023ல் முடிவடைகிறது.<br><br>மேற்கண்ட 8 பணியாளர்களில், ஜனவரி 2023 முதல் 7 பணியாளர்கள் மட்டும் பணியில் ஈடுப்படுத்தப்பட்டு வருகிறார்கள். மேற்கண்ட 7 பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.04.2023 முதல் 31.03.2024 வரை நீட்டித்து கொள்ளவும், மாமன்ற தீர்மான எண் 207, நாள்.29.09.2022ன் படி, 2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.573/– வீதம், உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.16.00 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br><br>இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தப்பட்ட கணினி இயக்குபவர்கள் 7 நபர்களின் பணிக்காலத்தினை 01.04.2023 முதல் 31.03.2024 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.16.00 இலட்சத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/1576/2018 | |
| | 14) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளான முத்தம்மாள் காலனி, ஆதிபராசக்தி நகர், தனசேகர் நகர், ரஹமத் நகர், அய்யாச்சாமி காலனி, பொன்சுப்பையா நகர், லுர்தம்மாள்புரம், மற்றும் செயிண்ட் மேரிஸ் காலனி போன்ற பகுதிகளில் கடந்த 2015 மற்றும் 2020ம் ஆண்டுகளில் பெய்த பருவமழையின் காரணமாக அதிகளவில் வெள்ள நீர் சூழ்ந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகியது.<br>மேற்படி பகுதிகளில் மழைநீர் தேங்காமல் தடுக்கும் வகையில் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நான்கு சிப்பகளாக ரூ.87.01 கோடி மதிப்பீட்டில் 36.36 கி.மீ நீளத்திற்கு அமைக்க விரிவான திட்ட அறிக்கை M/s.Struct House India Private Ltd., மூலம் தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br>மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் அவர்களின் கடிதம் எண் TNUDF/Projects/Thoothukudi SWD, நாள் | 305)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

03.03.2023ல் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதி ஆதாரம், மாநகராட்சி பங்கு தொகை மற்றும் நிபந்தனைகளின் படி மேற்படி மழைநீர் வடிகால் பணிகளை செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பின்வரும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதி ஆதாரம், மாநகராட்சி பங்கு தொகை மற்றும் நிபந்தனைகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நிதி ஆதாரம் | தொகை (ரூ.கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கடன் (தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி – TNUDF– Under ADB assisted TNUFIP-T3) | 17.40 | 20.00 % |
| 2 | மான்யம் (திட்ட நிலைத்தன்மை மான்ய நிதி) – PSGF – Under ADB assisted TNUFIP-T3) | 60.91 | 70.00 % |
| 3 | மாநகராட்சி பங்குத் தொகை | 8.70 | 10.00 % |
| | **மொத்தம்** | **87.01** | **100 %** |

1. மேற்கண்ட பணிக்கு திட்ட மதிப்பீடு ரூ.87.01 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .
2. மேற்படி திட்டத்தினை செயல்படுத்த அரசுவிதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதனடிப்படையில் மான்யம் மற்றும் கடன் பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
3. திட்டப்பணியில் மொத்த மதிப்பீட்டில் 10% தொகையான ரூ.8.70 கோடியினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
4. திட்டப்பணி துவக்கப்பட்ட நாளது தேதி முதல் (Interest During Construction –IDC) மேற்கண்ட பணிக்கான கடன் தொகை மீதான வட்டியினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
5. ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சியில் தயார்

| | | |
|---|---|---|
| | செய்யப்படும் வரவு செலவு திட்ட அறிக்கையில் மழைநீர் வடிகாலினை பராமரிக்க பொது நிதியில் தொகை ஒதுக்கீடு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/9047/2014 (SWD PH IV) | |
| | **15)** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு கடற்கரை சாலை சர்வே வார்டு எண்.1, பிளாக் 7, புல எண்.112/2ல் 98 ச.மீட்டர் பரப்பில் (சதுர அடியில் 1055) மாநகராட்சிக்கு சொந்தமான சத்துணவு கூட கட்டிடம் இடிந்த நிலையில் அருகில் உள்ள சத்துணவு கூடத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி காலியாக உள்ள தெற்கு கடற்கரை சாலை சத்துணவு கூடம் வளாகத்தை மகளிர் சுய உதவிகுழு மேம்பாட்டிற்காக பயன்படுத்த தரை வாடகை அடிப்படையில் அனுமதி வழங்குமாறு சகாய பவுண்டேசன் அறக்கட்டளையிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.<br><br>இதனைத் தொடர்ந்து 2007ம் ஆண்டு மாமன்ற தீர்மான எண். 287/2007 ன்படி மாநகராட்சி வருமானத்தை உருவாக்கவும், இடிந்த நிலையில் உள்ள மேற்படி சத்துணவு கூட கட்டிடத்தை அப்புறப்படுத்திவிட்டு, அவ்விடத்தில் புதிதாக கடைகள் கட்டி குத்தகை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.<br>அதன் அடிப்படையில் மேற்படி இடத்தினை தனிநபர் யாரும் ஆக்கிரமிப்பு செய்யா வண்ணம் தடுத்திடவும், மாநகராட்சி வருவாயைப் பெருக்கும் வகையில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மீனவ மகளிர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் விதமாக சகாயஸ் பவுண்டேசன் மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பக அறக்கட்டளை மூலம் சுயதொழில் பயிற்சி வழங்கும் பொருட்டு மேற்படி அறக்கட்டளைக்கு மாநகராட்சி நிபந்தனைகளின் அடிப்படையில் மற்றும் அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் அரசாணை சுற்றறிக்கைக்கு கட்டுப்படும் வகையில் தரை வாடகை நிர்ணயம் செய்து மாத வாடகை அடிப்படையில் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>அ16/1369 /2023 | 306)<br>மாநகராட்சிக்கு சொந்தமாள இடம் தனிநபர்களால் ஆக்கிரமிக்கப்படுவதை தவிர்க்கும் விதமாகவும், மீனவ மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் அடிப்படையில் மேற்படி இடத்திற்கு குறைந்த வாடகை நிர்ணயம் செய்து சகாய பவுண்டேசன், மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பக அறக்கட்டளை என்ற பெயருக்கு வழங்க அனுமதிக்கப்பட்டது |
| | **16)** தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 30.01.2023 ம் தேதி 273ஆம் எண் தீர்மானத்தில், | 307)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப் |

இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் தெற்கு காட்டன் சாலையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக 7 கடைகள் மற்றும் வணிகம் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய 4 அறைகளுக்கு 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ( உரிமம் ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு ) 21.03.2023 அன்று நடைபெறும் என தெரிவித்து மேற்படி தெற்கு காட்டன் சாலை வணிக வளாகம் முன்பு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் கவனத்தை ஈர்க்கும் வகையில் விளம்பர பலகை (Flex Board) மூலமாகவும் மற்றும் இம்மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலக அறிவிப்பு பலகையில் மேற்படி 4வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 15.03.2023 அன்று வெளியிடப்பட்டது.

அதன்பேரில் 21.03.2023 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர் முன்னிலையில் வரப்பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப உறை ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

தெற்கு காட்டன் சாலையில் தரை தளத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக **கடை எண்.5**க்கான உரிமத்திற்கு மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|

பட்டது.
2.அனுமதிக்கப் பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>ரூ.</td><td></td></tr>
<tr><td>1.</td><td>திரு. இ.ராய்ஸ்,<br>320 E, மரியா ஸ்குயர்,<br>தெற்கு காட்டன் சாலை<br>தூத்துக்குடி–1</td><td>ரூ.8,500/–</td><td>ரூ.8,700/–</td></tr>
</table>
அ) மேற்படி வணிக வளாக தரை தளம் கடை எண்.5க்கு திரு.இ.ராய்ஸ் என்பவர் அளித்த ஒரேயொரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட மாத வாடகை ரூ.8,700/– மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்,<br>
ஆ) மேற்படி தெற்கு காட்டன் ரோடு வணிக வளாகம் தரைதளத்தில் உள்ள கடை எண். 2,3,4,8,9,11 மற்றும் முதல் தளத்தில் கடை எண்.F1, F2 இரண்டாம் தளத்தில் கடை எண். S1,S2 க்கான உரிமத்திற்கு 4வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எந்த நபரும் முன்வரவில்லை. எனவே மேற்படி கடைகளுக்கு 5வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. “அ” மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>
2. “ஆ” மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
அ16/2380/2022
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>17) தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஊரகப் பகுதிகளில் நத்தம் புறம்போக்கு உட்பட ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக குடியிருந்து வரும் மக்கள் மாநகராட்சியின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் மின் இணைப்பு,</td>
<td>308)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | குடியிருக்கும் முகவரியில் ஆதார் அட்டை, குடிமைப்பொருள் வழங்கல் அட்டை போன்றவற்றைப் பெற்று பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். இவ்வாறாக நீண்ட காலமாக குடியிருந்து வரும் இம்மக்களுக்கு இந்நாள் வரை சொத்து வரி, குடிநீர் கட்டணம் போன்றவை வரி விதிப்பு செய்யப்படவில்லை.<br>மேலும் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் பட்டா இன்றி நீண்ட நாட்களாக பூர்வீக குடியிருப்புகளாக குடியிருந்துவரும் மக்களுக்கு வீட்டுவரி, குடிநீர் கட்டணம் போன்றவை இதுவரை விதிக்கப்படவில்லை. மாநகராட்சியின் எல்கைக்குள் குடியிருந்து சாலை, தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திக்கொண்டு சொத்துவரி, குடிநீர் கட்டணம் போன்ற அத்திவாசிய மற்றும் இதர கட்டணங்களை மாநகராட்சிக்கு செலுத்தாமல் இருந்து வருகின்றனர். இதனால் குடியிருப்பு பகுதிகளில் மாநகராட்சி மூலம் பல்வேறு சேவைகளை அளித்துவரும் நிலையில், மாநகராட்சிக்கான வருவாய் ஏதும் மேற்படி பகுதியில் இருந்து வரப்பெறவில்லை.<br>எனவே மேற்படி பகுதிகளில் மாநகராட்சிக்கான வருவாயை பெருக்கும் விதத்திலும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட பிரிவு 121(1 ) இல் மாநகராட்சியில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் வரி விதிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளபடி மாநகராட்சிக்கான நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் விதமாக மேற்படி பகுதிகளில் வசித்துவரும் பொது மக்களிடம் கட்டிடத்திற்கான தற்காலிக சொத்துவரி, தற்காலிக குடிநீர் இணைப்பு வழங்குதல், இதர தற்காலிக வரி மற்றும் தற்காலிக வரியில்லா வருவாய்களை நிர்ணயம் செய்திட குடியிருப்போரிடம் தற்காலிக சொத்துவரி, தற்காலிக குடிநீர் கட்டணம் போன்றவற்றிற்காக ஏற்படுத்தும் வரிவிதிப்பினை கொண்டு பிற்காலத்தில் தாம் குடியிருக்கும் இடத்திற்கு எவ்வித உரிமையும் கோர மாட்டோம் என சான்று உறுதி வழங்கும் வழக்கறிஞர் (Notary Public) மூலம் உறுதிமொழி பெற்றுக் கொண்டு இவ்வரிவிதிப்பின் மூலம் எவ்வித உரிமை பாத்தியமும் கோருவதற்கான வழி வகை இல்லை என்ற நிபந்தனையுடன் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கான தற்காலிக வரிவிதிப்புகள் ஏற்படுத்தி வரிகள் / கட்டணங்கள் நிர்ணயம் செய்திட இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :– மாமன்றம் அனுமதிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| | அ1/1397/2023 | |
| | 18) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் இளைஞர்கள் தங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் புல்தோட்டம், ரெயில்வே ஸ்டேசன் ரோடு, சுந்தரவேல்புரம் மற்றும் அசோக் நகர் ஆகிய பகுதிகளில் நவீன முறையில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி விளையாட்டு அரங்க பணிகள் விரைவில் நிறைவு பெறவுள்ள நிலையில் மேற்படி விளையாட்டரங்கினை பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் பயன்படுத்தும் வகையில் தற்போது நடைமுறையில் உள்ள சந்தை கட்டணங்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்து பொதுமக்கள் நேரிடையாக மாநகராட்சியிடம் தொடர்பு கொண்டு பயன்பெறும் வகையில் மாநகராட்சியால் துறைரீதியாக பராமரிக்கப்படவுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்காகவும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :– மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/ 3209 / 2015 (Badmin) | 309)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:31.03.2023

மேயர்
தூத்துக்குடிமாநகராட்சி